தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2022

**15 வயதுப்பிரிவு**
(01.01.2007 – 31.12.2008 வரையில் பிறந்தோர்)

## விடுதலை தேடும் மாந்தர்க்கெல்லாம் எடுத்துக்காட்டு தமிழீழத் தேசியத்தலைவர்

அடக்குமுறைகள் இன்றி சுதந்திரமாக வாழ்தல் என்பது அனைவருக்குமான உரிமை. உலகில் எங்கெல்லாம் அவ்வுரிமை மறுக்கப்படுகிறதோ அங்கெல்லாம் விடுதலைப் போராட்டங்கள் உருவாகின்றன. ஈழத்தீவின் தொன்மக் குடிகளான தமிழர்களின் உரிமைகள் மறுக்கப்பட்டபோது அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராட வேண்டிய நிலை ஏற்பட்டது.

அமைதி வழியில் உரிமைக்காகப் போராடிய தமிழர்களை இராணுவத்தின் துணையுடன் ஆயுத வழியில் ஒடுக்கி, ஆக்கிரமிப்புகளை அதிகரித்தது சிங்கள அரசு. இவ் அடக்குமுறையை எதிர்கொள்ளத் தமிழ் மக்கள் ஆயுதம் ஏந்தத் தள்ளப்பட்டார்கள். எம் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இராணுவ அடக்குமுறைகளுக்கு எதிராக ஆயுதம் ஏந்திப் போராடத் துணிந்தார் தலைவர் மாமா. தன்னுடைய பதினாறு வயதில் தமிழ் மக்களின் விடுதலையைத் தனது வாழ்வாக வரித்துக்கொண்டார்.

தலைவர் மாமா உருவாக்கிய விடுதலைப் போராட்டம், பெருவளர்ச்சி கண்டு ‘தமிழீழ விடுதலைப் புலிகள்’ அமைப்பாக எழுச்சியுற்றது. அவர் வழியில் ஆயிரமாயிரமாய் அணிதிரண்டனர் தமிழ் இளையோர்! எங்கள் தாய்நாட்டையே களமாகவும் வளமாகவும் கொண்டு, முப்படைகளையும் வளர்த்தெடுத்தார் தலைவர் மாமா. மண்விடுதலையோடு சமத்துவ வாழ்வியலையும் பெண்விடுதலையையும் முன்னெடுத்தார். வறுமையை ஒழித்து, தன்னிறைவுப் பொருண்மியத்தை மேம்படுத்தினார். நூற்றுக்கணக்கான கட்டுமானங்களை அமைத்து, நிகழ் அரசை நிறுவி, எம் தாய்நாட்டை உலகத்துக்கு எடுத்துக்காட்டாக ஆக்கினார்.

“இயற்கை எனது நண்பன். வாழ்க்கை எனது தத்துவாசிரியன். வரலாறு எனது வழிகாட்டி” என்ற சிந்தை கொண்டிருப்பவர் தலைவர் மாமா. மக்களுக்காக எவ்வாறு வாழ வேண்டும் என்பதை வாழ்ந்து காட்டுபவர் அவர். சொல்லுக்கு முன் செயல் இருக்க வேண்டும் என்பது அவரது வழிகாட்டல்.

“நான் பெரிது நீ பெரிது என்று வாழாமல் நாடு பெரிதென்று வாழுங்கள். நாடு நமக்குப் பெரிதானால் நாம் எல்லோரும் அதற்குச் சிறியவர்களே. எமது நிலையற்ற வாழ்விலும் பார்க்க நாட்டின் வாழ்வே பெரியது” என்ற சிந்தனையோடு வழிகாட்டுகின்ற பெருவீரன் அவர்.

தலைவர் மாமா அவர்கள் எமக்கு மட்டுமல்ல, விடுதலை வேண்டிநிற்கும் எல்லா மாந்தர்க்கும் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார். அவரைத் தமிழீழத் தேசியத் தலைவராகப் பெற்ற நாம் பெரும் பேறு பெற்றவர்களாவோம். அவரது வழிகாட்டலை ஏற்று நிமிர்கிறோம். உரிமை மறுக்கப்பட்டு, வழிகாட்டல் இன்றித் தவிக்கும் எல்லோருக்கும் அவர் ஒளியாவார். அவரது வழிகாட்டலின் வழியே நாம் தமிழீழம் மீட்டாள்வோம்.

நன்றி,
வணக்கம்.